சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 2 | நாள் | : 13.11.2025 |
| அசல் வழக்கு எண். | 62/2023 | | |
| பெயர் | ஹஜாமுகைதீன் | த/பெ | அப்துல் சத்தார் |
| வயது | அப்துல்சதா | தொழில் | Own Shop |
| கிராமம் | மேலச்சாலை | தாலூக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவேன். வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் என்னுடைய சகோதரிகள். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான். இதற்கு முன்பே எங்கள் ஜமாத்தார் பேசி முடிவு செய்தபடி வழக்கில் கண்ட 1 முதல் 6 சொத்துக்களான சீர்காழி நகரில் உள்ள என் பாகத்திற்கு கொடுத்தும் மீதியை வாதியும் மற்ற 3ம் பிரதிவாதிகளும் சரிசமமாக அடைந்து கொள்ளவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது அதன்படி பிரித்துக்கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் அந்த வகையில் வழக்கை முடித்து வைக்க வேண்டுகிறேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. A.S. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

13/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை